**KOVAI MEDICAL CENTER AND HOSPITAL LIMITED**
**99, AVINASHI ROAD, COIMBATORE-641014**
**40th ANNUAL GENERAL BODY MEETING 2025-2026**
**CHAIRMAN'S SPEECH**

**DATE: AUGUST 26, 2026** **TIME:** 11 AM

**Dear Respected Shareholders,**

Greetings!

I and our directors of KMCH welcome you all for our 40th Annual General Body Meeting.

I am sorry to inform you about the demise of Dr. Thavamani Devi our Vice Chairman and Joint Managing Director of KMCH. We lost the great mother of our institution. we condole for the loss.

The year 2025-26 is a progressive year for KMCH. You have been given our Director's report and Company Auditor's audited financial results and recommendations. We are sure that you have gone through them and understood the contents.

This 2025-26 year showed good performance of the hospital. This year growth was 16% compared 12% in the year 2024-25.

The hospital turnover was Rs. 1610 crores compared to Rs. 1390 crores in the previous year. The profit was Rs. 244 crores compared to Rs. 208 crores in 2024-2025. Our directors are very happy to recommend 150% dividend for this year. It is a great boost for our shareholders.

**You are aware that our KMCH group has two major services:**

1. Healthcare services
2. Educational services

We are doing great services in these areas

## I. Healthcare Services :

A. Main Center – Main Campus
B. Sulur Center
C. Kovilpalayam Center
D. Erode Speciality Center
E. City Center

Our healthcare services are impressively expanding to all reaches of our society. Our Main Center showed many improvements. We recently added around 60 new patient beds. We built new OP Block with added facilities for our OP Patients.

We are greatly honoured by our Vice-President of India, Honourable Thiru.C.P. Radhakrishnan by opening our New OP & Neuro – Science Block on Jan 15, 2026 and also inaugurated our Post- graduate medical education program at KMCH Medical College. It was really a great honour for our KMCH group.

In this Neuro-Science Block we are planning to start a Dementia institute with an advanced imaging equipment – PET MRI with a cost of Rs.55 crores. It will be one of the firsts in Tamilnadu. Like this we will have advanced diagnostic equipment in all specialities of medicine.

Another great step of addition will be 300 bedded children's hospital in the main campus. The new improvements will be changing the face of KMCH Main center's front areas. The present EMR and Main entrance will look like new OP Neuro-Science Block.

On the Eastern side of Main hospital, a new service block will be added**.** It will be called "Thavamani Advanced Oncology Center (TAO)".

Our biggest problems are Room availability for patients and parking for our customers. A 600 car park - Mechanical Park will be available soon in our campus. Rooms problem may be solved with our new planned children's hospital and other infrastructure plans.

With all these new initiatives, our customers-patients will be taken care properly.

## II. Education Services

KMCH Medical College and Hospital are doing very well. Our first batches of MBBS doctors are already graduated successfully and we are proud that we have started to give good doctors to our society. This year our Vice- President of India Mr.C.P. Radhakrishnan inaugurated our PG program in our institution. Already 39 students in 10 departments have joined and started their career. For educating and rural services of our students recently we have started Thadagam Rual Health Center. It is a great experience of our students.

All areas of KMCH group are doing well. Only the project at Chennai has problem with government and environment agencies. We hope it will be solved soon and we will proceed with our Chennai project.

**III. Hospital Functions:**

With so many diversions and activities, we have not forgotten our employees. Recently there is a new employees labour law introduction. Yet it is not cleared by the government. But it will be good to the employees. Our employees are doing their services extremely well. Our shareholders are our backbone. We will continue to give the benefits as before. They are our brand ambassadors.

With all these great works our hospital is getting awards from various agencies. Safety and Quality are our main function of the hospital. Our name is well known in Southern India and India. We are getting patients from all over India and Abroad. This is because of our good services by employees. We are very thankful to our shareholders and employees.

Our Directors and myself, once again thank you for attending the $40^{th}$ AGM.

Wish you all the best.

Thanking you.

**Dr. Nalla G Palaniswami**
Chairman and Managing Director

# <u>கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட்</u>
## <u>99, அவினாசி சாலை, கோயம்புத்தூர்- 641014</u>
## <u>40 ஆவது ஆண்டு பொதுப்பேரவைக் கூட்டம் - 2025-2026</u>
## <u>தலைவரின் உரை</u>

**தேதி: ஆகஸ்ட் 26, 2026** **நேரம்: காலை 11 மணி**

நமது KMCH-ன் 40-ஆவது ஆண்டு பொதுப்பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்பதில் நானும் நமது KMCH இயக்குநர்களும் மகிழ்ச்சியடைகிறோம்.

நமது நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் இணை நிர்வாக இயக்குநருமாகிய மருத்துவர். தவமணி அவர்களின் மறைவை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகப்பெரிய பங்காற்றிய ஒரு சிறந்த தாயை நாம் இழந்துள்ளோம். அவர்களின் மறைவிற்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2025-26 ஆம் ஆண்டு KMCH நிறுவனத்திற்கு ஒரு சிறப்பான முன்னேற்ற ஆண்டாக அமைந்துள்ளது. உங்களிடம் நம் இயக்குநர்களின் அறிக்கையும், நிறுவனத்தின் தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளும், அவர்களின் பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் அனைவரும் படித்து, அதன் விவரங்களைப் புரிந்துகொண்டிருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

2025-26 ஆம் ஆண்டில் நம் மருத்துவமனை சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த 2024-25 ஆம் ஆண்டில் 12% வளர்ச்சி பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு 16% வளர்ச்சியை எட்டியுள்ளோம்.

இந்த ஆண்டு நமது மருத்துவமனையின் மொத்த வருவாய் ரூ.1,610 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டில் இது ரூ.1,390 கோடியாக இருந்தது. அதேபோல், லாபம் ரூ.244 கோடியாக உயர்ந்துள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் அது ரூ.208 கோடியாக இருந்தது.

இந்த சிறப்பான செயல்திறனைத் தொடர்ந்து, நம் இயக்குநர்கள் நமது பங்குதாரர்களுக்கு இந்த ஆண்டு 150% டிவிடெண்ட் (Dividend) வழங்க பரிந்துரைத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இது நம் பங்குதாரர்களுக்கு ஒரு சிறந்த ஊக்கமாக இருக்கும்.

KMCH குழுமம் இரண்டு முக்கிய துறைகளில் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்:
1. மருத்துவச் சேவைகள்
2. கல்விச் சேவைகள்

இந்த இரண்டு துறைகளிலும் நாம் சிறப்பான சேவைகளை செய்து வருகிறோம்.

### <u>I. மருத்துவச் சேவைகள்</u>
நமது முக்கிய மருத்துவச் சேவை மையங்கள்:
1. முதன்மை மையம் - KMCH Main Center மருத்துவமனை
2. சூலூர் மருத்துவமனை
3. கோவில்பாளையம் மருத்துவமனை
4. ஈரோடு ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை
5. சிட்டி சென்டர்

நமது மருத்துவச் சேவைகள் சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன.

நமது முதன்மை மருத்துவமனை வளாகத்தில் பல்வேறு முன்னேற்றப் பணிகள் நடந்து கொண்டுள்ளன. சமீபத்தில் 60 புதிய நோயாளர் படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. வெளிநோயாளிகளுக்கான புதிய OP Block கட்டப்பட்டு, கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2026 ஜனவரி 15 அன்று, இந்தியாவின் மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் நமது புதிய OP மற்றும் நரம்பியல் மையத்தைத் திறந்து வைத்ததுடன், KMCH மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவக் கல்வித் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இது நமது KMCH குழுமத்திற்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும்.

இந்த நரம்பியல் மையத்தில், மேம்படுத்தப்பட்ட PET-MRI இமேஜிங் ஸ்கேன் உடன் டிமென்ஷியா (Dementia) மையத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக சுமார் ரூ. 55 கோடி முதலீடு செய்யப்பட உள்ளது. தமிழ்நாட்டிலேயே இது ஒரு முன்னோடியான முயற்சியாக இருக்கும்.

இதேபோன்று, மருத்துவத்தின் அனைத்து துறைகளிலும் நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட நோயறிதல் கருவிகளை அறிமுகப்படுத்தி உள்ளோம்.

மேலும் ஒரு மிகப்பெரிய புதிய திட்டமாக, நமது முதன்மை வளாகத்தில் 300 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் மருத்துவமனையை அமைக்க உள்ளோம்.

இந்த புதிய மாற்றங்களால், KMCH முதன்மை மருத்துவமனையின் முன்புறத் தோற்றம் முழுமையாக மாற்றியமைக்கப்படும். தற்போதைய EMR மற்றும் பிரதான நுழைவாயில் பகுதிகளும் புதிய OP மற்றும் நரம்பியல் மையத்திற்கு ஏற்ப நவீனமயமாக்கப்படும்.

முதன்மை மருத்துவமனை கட்டிடத்தின் கிழக்குப் பகுதியில் மேம்படுத்தப்பட்ட கேன்சர் மையம் தொடங்கப்பட உள்ளது. இது **"Thavamani Advanced Oncology Center (TAO)"** என அழைக்கப்படும்.

தற்போது நமக்கு மிகப்பெரிய சவால்களில் ஒன்று நோயாளிகளுக்கான அறைகள் கிடைப்பதும், இரண்டாவது நோயாளிகளுக்கு வாகனம் நிறுத்த இடம் கொடுப்பதும் ஆகும்.

இதற்கு தீர்வாக, நமது மருத்துவ வளாகத்தில் விரைவில் 600 கார்கள் நிறுத்தக்கூடிய மெக்கானிக்கல் பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

புதிய 300 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் மருத்துவமனை மற்றும் மெக்கானிக்கல் பார்க்கிங் அமைக்கப்பட்ட பிறகு, நோயாளிகளுக்கான அறைகள், வாகனங்கள் நிறுத்துதல் தொடர்பான பிரச்சினை பெருமளவில் தீர்க்கப்படும் என நம்புகிறோம்.

இந்த அனைத்து புதிய முயற்சிகளின் மூலம், நம் நோயாளிகளுக்கு இன்னும் சிறந்த மற்றும் தரமான மருத்துவ சேவைகளை செய்ய முடியும் என்பது எங்கள் எண்ணம்.

## II. கல்விச் சேவைகள்

KMCH மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

நமது முதல் MBBS மாணவர் குழு வெற்றிகரமாகப் பட்டம் பெற்றுள்ளது. இதன் மூலம் நமது சமூகத்திற்கு சிறந்த மருத்துவர்களை உருவாக்கி வழங்கத் தொடங்கியிருப்பதில் நாம் பெருமை கொள்கிறோம்.

இந்த ஆண்டு இந்தியாவின் மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் நமது நிறுவனத்தில் முதுநிலை மருத்துவக் கல்வித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இப்பொழுது 10 துறைகளில் 39 மாணவர்கள் முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்ந்து, தங்களது மருத்துவப் பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.

KMCH குழுமத்தின் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. சென்னை திட்டம் மட்டும் தற்போது அரசு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் தொடர்புடைய சில பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. அந்தப்

பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் என்றும், அதன் பின்னர் நம் சென்னை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த முடியும் என்றும் நம்புகிறோம்.

## III. மருத்துவமனை செயல்பாடுகள் மற்றும் பணியாளர்கள்

பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளில் நாம் கவனம் செலுத்தி வந்தாலும், நம் ஊழியர்களையும் பங்குதாரர்களையும் ஒருபோதும் மறந்துவிடவில்லை.

சமீபத்தில் புதிய தொழிலாளர் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் முழுமையான விவரங்கள் குறித்து அரசாங்கத்திடமிருந்து இன்னும் தெளிவான வழிகாட்டுதல்கள் கிடைக்கவில்லை. இருப்பினும், இந்த புதிய சட்டம் ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் என்று நம்புகிறோம்.

நம் ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் தான் KMCH நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

நம் பங்குதாரர்களுக்கும் தொடர்ந்து சிறந்த சேவைகளை வழங்குவோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நமது சிறப்பான மருத்துவச் சேவைகளுக்காக பல்வேறு நிறுவனங்களிடமிருந்து விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்று வருகின்றோம்.

சிறப்பான மருத்துவமும் பாதுகாப்பும் நமது மருத்துவமனையின் முக்கியக் கொள்கைகளாகும்.

நம் மருத்துவச் சேவைகள் தென்னிந்தியா மட்டுமின்றி, இந்தியா முழுவதும் நன்கு அறியப்பட்டுள்ளன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நோயாளிகள் நம்மிடம் சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் நமது தரமான மருத்துவப் பராமரிப்பும், அர்ப்பணிப்புடன் பணியாற்றும் நம் ஊழியர்களும்தான்.

எங்கள் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்து ஆதரவு வழங்கி வரும் அனைத்து பங்குதாரர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் 40-ஆவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும், நம் இயக்குநர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மீண்டும் ஒருமுறை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் இனிவரும் ஆண்டுகள் சிறப்பானதாகவும், வளமானதாகவும் அமைய எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

**டாக்டர் நல்ல பழனிசாமி**
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்